
பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 09 புதன்கிழமை 25.09.2024 கதிர் 322

இது ரகசியம் அல்ல!



நாடாளுமன்றம் கலைக் கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக் கப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டே வாரங்களில் வேட்பாளர்களைத் தேடிப்பிடிப்பது, தேர்தலுக்குத் ☞ 2

## தமிழர்களின் உரிமைகளை அங்கீகரித்து சமஷ்டி அரசமைப்பை கொண்டுவாருங்கள்

### ஜனாதிபதியிடம் கஜேந்திரன் வலியுறுத்து

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை அங்கீகரித்து எமது தேசம் இறைமை என்ற வகையில் எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அதனடிப் படையில் ஒரு சமஸ்டி அரசமைப்பினைக் கொண்டுவரவேண்டும் என்று வலியுறுத்தினார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற திலீபன் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்ற பின்னர் அவர் இதனைத்தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

அநுரகுமாரவும்ஒடுக்குமுறைக்குஎதிராகபோராடிய ஒருவராகஇருக்கின்றார். அவர்கள்சோசலிசவாதிகளாக தங்களைக்காட்டிக்கொண்டிருந்தாலும்துரதிஸ்டவசமாக அவர்களது அமைப்பு தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பிற்கு கடந்தகாலங்களில் முழுமையாகத் துணைநின்றது.

ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழ் மக்கள் இறுதிப்போரில் மடிவதற்கு இந்த அமைப்பு உதவி புரிந்தது. தற்போது நாட்டின் ஆட்சி அதிகாரத்தினை அது பிடித்துள்ளது.

நாங்கள் அனைவரையும் அரவணைத் துச்செல்வோம்என்றுஅவர்கள்சொல்லிஇருக்கிறார்கள். நாம் அவரிடம் கேட்பது என்னவென்றால் ஒரு ☞ 2

## இலங்கை மக்களுக்கு இன்று உரையாற்றுகிறார் ஜனாதிபதி

புதிய ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்க இன்றுநாட்டுமக்களுக்கு விசேடஉரையொன்றை ஆற்றவுள்ளார்.

இரவு 7.30 மணிக்கு அனைத்து இலத்திரனியல்ஊடகங் களிலும் இந்த உரை நேரடியாக ஒளிபரப் பப்படவுள்ளதாக ஜனா திபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

அநுரகுமாரதிசாநா யக்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றும் முதலாவது உரை இதுவென்பதுகுறிப்பிடத் தக்கது.

### ஊழல், மோசடி வழக்கில்

## நவம்பர் 29 சாட்சியம் வழங்க அமைச்சர் ஹேரத்துக்கு பணிப்பு

கடந்த 'நல்லாட்சி' காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட இலஞ்ச ஊழல்வழக்குதொடர்பில் சாட்சியமளிப்பதற்காக எதிர்வரும் நவம்பர் 29 நீதிமன்றில் முன்னிலையாகுமாறு தேசிய மக்கள் ☞ 2

## அயலுறவுத்துறை அமைச்சராக விஜித ஹேரத் நேற்று நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுபதவியேற்றது. இதில்பிரதமர்ஹரினி அமரசூரியவுக்குமேலதிகமாகதேசியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத்தும் அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு அயலுறவுத்துறை அமைச்சு உட்படப் பல அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் பொதுசன ஊடக அமைச்சு, போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள், பொதுமக்கள் பாதுகாப்பு, அயலுறவுத்துறை , சுற்றாடல், வனஜீவ ராசிகள், வனவளங்கள், ☞ 2

# நாடாளுமன்றம் நேற்று நள்ளிரவுடன் கலைப்பு

### நவம்பர் 14 பொதுத் தேர்தல்: ஒக்டோபர் 4 முதல் ஒருவாரம் வேட்புமனுத் தாக்கல்

**இலங்கை நாடாளுமன்றம் நேற்றிரவு கலைக்கப்பட்டது. இதற்கானஉத்தரவுடனான அதிவிசேடவர்த்தமானிஅறிவித்தல்ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் உத்தரவின் பேரில் நள்ளிரவு வெளியிடப்பட்டது**

**இந்த அறிவிப்புக்கு அமைய 9ஆவது நாடாளுமன்றம் நள்ளிரவுடன் கலைக் கப்பட்டது. அதேநேரம் 10ஆவது நாடாளு மன்றத்தைத்தெரிவுசெய்வதற்கானதேர்தல் நவம்பர் மாதம் 14 இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**நாடாளுமன்றக் கலைப்புக் குறித்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசமைப்பின் 70 ஆம் உறுப்பு ரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 10 இன் ஏற்பாடுகளுக்கமையவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** ☞ 2

## 15 அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்

புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் மற்றும் 15 அமைச்சுகளுக்கும் செயலாளர்கள் உள்ளிட்ட 17 பேர் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சுகளில் ஏற்கனவே பதவி வகித்த, உரிய தகுதிகளைக் கொண்ட ஒரு சில செயலாளர்கள் தொடர்ந்தும் அவ்வமைச்சுகளில் மீண்டும் நியமிக் கப்பட்டுள்ளனர்.

ஜீ.பீ. சுபுதந்திரி பிரதமரின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதோடு, டபிள்யூ.எம்.டீ.ஜே. பெனாண்டோ அமைச்சரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ☞ 8

## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு மொட்டுக் கட்சியும் ஆதரவு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறைமையைநீக்கவும், தேர்தல் முறைமையைமாற்றியமைக்கவும்தேசிய மக்கள் சக்தி முன்வந்தால் அதற்கான முழு ஆதரவையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வழங்கும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் ஊடகங்கள் மத்தியில் அவர் தெரிவித்த கருத்துக்களாவன:

1994ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அனைத்து ஜனாதிபதிகளும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக கூறிய போதிலும், எவரும் அவ்வாறு செய்யவில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான சிறந்த தருணம் இதுவாகும். எனவே நிறைவேற்றுஅதிகாரம்கொண்டஜனாதிபதி முறைமையைஒழிக்கவேண்டியதேவை இருந்தால் தாமதிக்க வேண்டாம்.

கொள்கை ரீதியான முரண்பாடுகள் தேசியமக்கள்சக்தியுடன்காணப்படுகின்றன. அதேநேரம், நாட்டின் எதிர்காலம், மற்றும் மக்களுக்கு நன்மை பயக்கவல்ல விடயங்களுக்கு நாம் ஆதரவளிப்போம்.

இதுகால வரையிலும் நாம் அவ்வாறு தான் செயற்பட்டு வந்திருக்கின்றோம். கொள்கை ரீதியாகமுறையானநிலைப்பாடுகள் காணப்படாமையால் தான் கொள்கை ரீதியான விடங்களில் இணைந்து செயற்பட முடியாத நிலைமைகள் உள்ளன என்றார்.



## பொதுத் தேர்தல் கூட்டணியில் பெரமுன ஐதேகவுடன் சேராது

### கட்சித் தலைவர் மகிந்த திட்டவட்டம்

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்த லுக்காக ஏற்படுத்த போகும் மாபெரும் கூட்டணியில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன இணையாது என்றுஅக்கட்சியின்தலைவர் முன்னாள் ஜனாதிபதி ☞ 2

## புதிய பிரதமருக்கு சஜித் வாழ்த்து

புதிய பிரதமர் ஹரிணிக்கு ஐக்கிய மக்கள்சக்தியின்தலைவர்சஜித்பிரேமதாச வாழ்த்து தெரிவித்துள்ளார்.

எக்ஸ் பக்கத்தில் தனது வாழ்த்தை அவர் பகிர்ந்துள்ளார்.

''பிரதமராக உங்கள் நியமனம் இலங்கைப் பெண்களை அவர்களின் திறமை, வலிமை மற்றும்தொலைநோக்கு பார்வையுடன் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு ஊக்கமளிக்கும் என்று நம்புகிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆஸ்திரேலிய உயர்ஆணையரும் பிரதமராக நியமிக்கப்பட்டஹரிணிக்குவாழ்த்துக்களை தெரிவித்துள்ளதோடு அரசியலில் பெண்களின் பலம் வலுப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறர்

### ரணிலின் பொருளாதார திட்டங்களைவிட

## அநுரவின் தேர்தல் அறிக்கை மீது மக்களின் நம்பிக்கையால் வெற்றி

### இப்படிச் சொல்கிறார் ஐதேக தவிசாளர் வஜிர

ரணிலின்பொருளாதாரத்திட்டங்களைவிட அநுர திசநாயக்கவின் தேர்தல் அறிக்கை மீது மக்கள்நம்பிக்கை கொண்டதன் வெளிப்பாடே ஜனாதிபதித் தேர்தலில் அவருக்குக் கிடைத்த வெற்றி என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தயாராவது என்று கட்சிகளின் முன்பாக ஏகப்பட்ட பணிகள் இருக்கின்றன.

தமக்கு எந்தவிதத்திலும் நேரடியான பாதிப்பு இல்லாத நிலையில் அரியநேத்திரனை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் பரீட்சார்த்த முயற்சியில் இறங்கிப் பார்த்த பொதுக் கட்டமைப்பில் உள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர், அதாவது கட்டமைப்பில் உள்ள 5 தமிழ்க் கட்சிகள் பொதுத் தேர்தலில் யாரோடு சேர்ந்து போட்டியிடுவது என்பதில் குழம்பிப் போயுள்ளன.

பொதுக் கட்டமைப்புச் சார்பில் அரிய நேத்திரனை இறக்கியதில் தமக்கு வெற்றிதான் என்று அவர்கள் என்னனதான் வெளிப்பார்வைக்கு மார் தட்டிக்கொண்டாலும் யாழ்ப்பாணத்தைத் தவிர மற்றைய மாவட்டங்களில் அவர்கள் வாங்கியிருக்கும் வாக்குகள் இந்தக் கட்சிகளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. அவர்கள் பெற்றிருக்கும் வாக்குகளின் அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு வெளியே எந்தவொரு மாவட்டத்திலும் அவர்களால் ஒருநாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக்கூட முழுமையாக வெல்ல முடியாது என்பதே இன்றைய நிலமை. யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே புளொட்டுக்கும் தமிழ் மக்கள் கூட்டணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் நிலையில், அரியத்தாருக்குக் கிடைத்த ஒரு லட்சத்து 16 ஆயிரம் வாக்குகள் மூலம் இங்கு கிடைக்கக்கூடிய 2 ஆசனங்களும் அவர்களுக்கே போகக்கூடிய சாத்தியங்கள் இருப்பதால் மற்றக்கட்சிகள் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களை முற்றாக இழக்கும் அபாயமே இருக்கின்றது.

இதனால், பொதுக் கட்டமைப்பிலிருந்து மெல்லக் கழன்று தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து பழையபடி கூட்டமைப்பு என்றுகொண்டு மக்களை ஏமாற்றுவது, அது முடியாதபட்சத்தில் எப்படியாவது தமிழ் அரசுக்கட்சியையும் பொதுக்கட்டமைப்புக்குள் கொண்டுவருவதற்கு முயற்சிப்பது என்று காய்நகர்த்தத் தொடங்கியிருக்கின்றன அந்தக் கட்சிகள். அதன்படி ரெலோ மற்றும் புளொட் தலைவர்கள் இன்று மாவையரை அவரது வீட்டில் சந்தித்து இது குறித்துப் பேச இருக்கின்றனர். தமிழ் அரசுக் கட்சிக்குள் இப்போதைக்கு அவர்களைப் பரிதாபத்தோடும் பரிவோடும் பார்க்கக்கூடிய ஒரே ஆள் மாவைதான். ஆனால், கட்சியோ மாவையரையே பரிவோடு பார்ப்பதற்ககுத் தயாராக இல்லை என்பதுதான் யதார்த்தம். அவர் ஜனாதிபதித் தேர்தலில் ஆடிய சகுணி ஆட்டங்களால் கொதித்துப் போயிருக்கும் கட்சியின் மத்திய செயற்குழுவினர் எப்போது மாவையரையே தூக்கி எறியலாம் என்கிற அளவில் கோபத்திலிருக்கின்றனர். இந்த நிலையில் இவர்கள் மாவையரிடம் பேசி ஆகப்போவது என்ன என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

ஜனாதிபதித் தேர்தலில் மாவையர் நடந்தகொண்ட விதத்தின் பின்னர் அவரது கருத்துக்கள் தமிழ் அரசுக் கட்சிக்குள் செல்லாக்காசு. அவருக்கு கட்சிக்குள் ஏற்கனவே அதுதான் நிலை என்றாலும், பெயருக்காவது அவரை தலைவராகக் காட்டிக்கொண்டிருந்தார்கள். இப்போது அந்த மரியாதையையும் அவர் கெடுத்துவிட்டார். எனவேஅவரின்காலில்விழுந்துரெலோவுக்கும் புளொட்டுக்கும் ஆகப்போவது ஒன்றுமில்லை. வேண்டுமானால் அவரையும் பொதுக் கட்டமைப்புப் பக்கம் அழைத்துச் செல்லலாம். நானும் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் அரியநேத்திரனுக்கு வாக்களிப்பேன் என்று மாவையர் சொல்லி மேடை ஏறிப் பேசியதன் பிற்பாடும் அரியத்தாருக்கு விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை இவ்வளவுதான் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே மாவையர் பொதுக் கட்டமைப்புப் பக்கம் செல்வதால் தமிழ் அரசுக் கட்சி இழக்கப்போவது ஒன்றுமில்லை. பொதுக் கட்டமைப்புப் பெறப்போவதும் ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப்போனால் பொதுத் தேர்தலில் மாவையருக்கும் ஒரு ஆசனம் ஒ-துக்கவேண்டிய நர்ப்பந்தம், பிரச்சினை பொதுக்கட்டமைப்புக்குள் வரும் என்பதைத் தவிர.

இந்தப்பின்னணியில் வரும் சனிக்கிழமை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியாவில் கூடுகின்றது. பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்தல், அரியநேத்திரன் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை (அனேகமாக அவரை கட்சியைவிட்டுத் தூக்குதல்), கட்சி முடிவை மீறி அரியத்தாருக்கு ஆதரவாகப் பரப்புரை செய்தி முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களிடம் விளக்கம் கேட்பதுடன் அவர்கள் மீதான ஒழுக்காற்றுநடவடிக்கையைத் தொடங்குதல் என்று அந்தக் கூட்டம் பெரும் எதிர்பார்ப்போடு இருக்கின்றது. மாவையர், சிறீதரன், சரவணபவன் உள்ளிட்டோர் தாம் செய்தவற்றின் விளைவுகளை அன்றைய தினம் நன்கு உணரக்கூடியதாக இருக்கும். அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதையாக முடியப் போகிறது.

இதற்கிடையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பொதுக் கட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான சிறீகாந்தா, தமிழ்த் தேசியம் பேசுகிற அனைவரும் சந்தர்ப்பவாத, சுயநலம் பேசுகின்ற அரசியலுக்கு விடைகொடுக்க வேண்டும் என்று ஒரு குத்தல் கதை கூறியிருக்கின்றார். அவர் இதைத் தமது கூட்டணிக்குள் இருந்துகொண்டே ரணிலுடன் கள்ள உறவுவைத்தவர்களைப் பார்த்தும்தான் கூறினார் என்றும் பார்க்கலாம்.

.................

வடக்குமாகாண ஆளுநராக இருந்தவரான திருமதி சாள்ஸ் பதவி விலகியைத் தொடர்ந்து அந்த இடத்திற்கு யாழ். மாவட்ட முன்னாள் செயலாளராக இருந்தவரான வேதநாயகன் நியமிக்கப்படவுள்ளார். அவர் அனேகமாக இன்று பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வேதநாயகன் ஊழல், மோசடிகளில் தொடர்பற்றவர் மற்றும் ஆளும் தரப்பாக இருந்த ராஜபக்சக்களுக்கோ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கோ அங்கஜன் ராமநாதனுக்கோ பணிந்துகடமையாற்றாதவர் போன்ற தகுதிகளைக் கொண்டவர் என்பதால் தேசிய மக்கள் சக்தியினரால் அவர் இந்தப் பதவிக்கு தெரிந்தெடுக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

பதவியில் இருந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவானவராக டக்ளஸ் மற்றும் அங்கஜன் தரப்பினரால் அவர் கணிக்கப்பட்டார். அதனால் அவருக்கு அரசியல் நெருக்கடிகள் அதிகம் இருந்தன. ஓய்வு பெறுவதற்கு வெறும் மூன்று மாத காலம் இருந்தபோது அவருக்குக் கட்டாய இடமாற்றம் வழங்கப்பட்டது. அதனை ஏற்க மறுத்த அவர் தான் ஓய்வுபெறப் போவதாக பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவித்தார்.

அவருக்கு ஆளுநர் பதவி வழங்குவதற்கு முன்னதாக அவரது நேர்மை மற்றும் ஊழலற்ற தன்மை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் தேசிய மக்கள் சக்தியினரால் விசாரிக்கப்பட்டதாகவும் தெரியவந்தது. அவர் நூறுவீதம் நற்சான்றுப் பத்திரம் வழங்கியிருக்கும் நிலையில் இன்று வேதநாயகன் தனது பதவியைப் பொறுப்பேற்பார் என்று தெரிகின்றது.

இடிமின்னல்

(idiminnal@gmail.com)

## நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி, அநுர குமார திசாநாயக்க ஆகிய நான்,

(அ) இன்று (செப். 24) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் நாடாளுமன்றத்தை கலைப்பதோடு, புதிய நாடாளுமன்றத்தை 2024 நவம்பர் 21 கூடுமாறு அழைக்கிறேன்.

(ஆ) 2024 நவம்பர் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான திகதியாக நிர்ணயிக்கின்றேன்.

(இ) 2024 ஆண்டு ஒக்டோபர் 4 முதல் 2024 ஒக்டோபர் 11 நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு முடிவுறும் காலப்பகுதி வேட்புமனுக்கள் ஏற்கப்படும் காலமாக அறிவிக்கப்படுகின்றது. தெரிவத்தாட்சி அதிகாரிகளினால் இந்தக் காலப் பகுதிக்குள் வேட்புமனு பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அதற்கு அமைவாக, புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தல் நவம்பர் 14 நடத்தப்படவுள்ளது.

ஒக்டோபர் 4 முதல் 11ஆம் திகதி நண்பகல் வரை, இதற்கான வேட்புமனுக்களை பெறுவதற்கான திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதிய நாடாளுமன்றத்தை நவம்பர் 21 கூட்டுவதற்கும் குறித்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வேளையில், தாம் ஜனாதிபதியாக பதவியேற்றதும் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைப்பார் என்று, அநுர குமார திஸாநாயக்க மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அநுரவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்கவுக்கு பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக்கொண்ட மக்கள் வாக்களித்திருந்தனர். அவர்களுக்கு எமது கட்சி சார்ப்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று நாட்டில் 42 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வழங்கியிருக்கும் பொறுப்பை அல்லது அவரால் முன்வைக்கப்பட்டிருந்த தேர்தல் கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களை செயற்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக சொல்லப்பட்ட விடயங்களை செயற்படுத்துவதைப் பார்க்க மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

மேலும் இலங்கையின் ஒட்டு மொத்த மக்களுக்கும் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தேவையான சூழல் ரணில் விக்ரமிங்கவினாலேயே ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அல்லது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தபோது இலங்கையைஸ்திரப்படுத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி அவர் இதனைச் செய்தார். அதற்காக இலங்கை மக்கள் அவருக்கு நன்றி தெரிவிக்கவேண்டும்.

மேலும் ரணில் விக்ரமசிங்க நாட்டை முன்னேற்றுவதற்கு முன்னெடுத்துச்சென்ற வேலைத்திட்டம், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய சங்கங்களுக்கிடையில் இடம்பெறும் உலகில் நன்கொடை வழங்கும் குழுக்களுடன் கலந்துரையாடி வங்குரோத்து அடைந்த நாட்டை, வங்குராத்து நிலையில் இருந்துவிடுவித்து, அவர் தயார்செய்துகொண்டு சென்ற வேலைத்திட்டங்களைவிட, இலங்கை மக்கள் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் முன்வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

அப்படியானால் அந்தப் பொறுப்பை இலங்கை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் அந்தப் பொறுப்பு நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கிறோம். அதனால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் ஒன்று ஏற்படாமல் இருப்பதற்கு அந்த பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டி இருக்கிறது என்றார்.

## பொதுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற அரசியல் உயர்பீட கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடிமட்ட அளவில் திட்டங்களை வகுத்து, கட்சியை மீண்டும் வலுவான நிலைக்கு கொண்டுவரும் செயற்பாடு முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான ஆசனங்களைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே கொள்கை முரண்பாடு உடையவர்களுடன் நாம் ஒன்றிணைய வேண்டிய அவசியம் கிடையாது.

பொதுஜன பெரமுன தனது கொள்கையில் உறுதியாக உள்ளது. அது தனித்துப் போட்டியிட்டு மக்களின் ஆணையைப்பெற்றுக் கொள்ளும். அதற்காக கிராம மட்டத்திலிருந்து கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றத்திற்காக சிங்கள மக்கள் அதிகாரத்தை உங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள், நீங்கள் கனவுகாண்கின்ற நாட்டை கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டினுடைய இனப்பிரச்சனை தீர்க்கப்படவேண்டும். அது எவ்வாறு தீர்க்கப்படவேண்டும் என்று நீங்கள் முடிவெடுக்கமுடியாது உங்களுக்கு அந்த அருகதை கிடையாது.

தமிழர்களின் விருப்பங்களை ஏற்றுக்கொண்டு அந்த விருப்பங்களை அங்கீகரிப்பதன் மூலமாகத் தமிழர்களை இந்த நாட்டின் ஆட்சியிலே பங்காளிகள் ஆக்குவதற்கு துணியவேண்டும். அந்த துணிச்சல் உங்களுக்கு இருக்கவேண்டும் என்று புத்தபிரானையும் எமது கடவுளர்களையும் நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை அங்கீகரித்து எமது தேசம் இறைமை என்ற வகையில் எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அதனடிப்படையில் ஒரு சமஸ்டி அரசமைப்பினைக் கொண்டுவருவதனூடாக இந்த நாட்டினுடைய எதிர்காலத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு தமிழர்களின் பங்களிப்பை பெறுவதற்கான அத்திவாரத்தை நீங்கள் இடவேண்டும்.

அதற்குரிய அணுகுமுறைகளையும் நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நீங்கள் உடனடியாக இறங்கவேண்டும் என்ற கோரிக்கையினை நாங்கள் அவரை நோக்கி முன்வைக்கின்றோம் என்றார்.

## அயலுறவுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்வழங்கல், பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை ஆகிய அமைச்சுகளின் பொறுப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் விஜித்த ஹேரத்துக்கு வழங்கப்பட்டது.

## 15 அமைச்சுக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கே.டீ.எஸ். ருவன்சந்திர, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளராகவும், கே.எம்.எம். சிறிவர்தன நிதி, பொருளாதார அபிவிருத்தி, தேசிய கொள்கைகள், திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சின் செயலாளராகவும் அருணி விஜேவர்தன வெளிவகார அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜே.எம்.டீ. ஜயசுந்தர கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராகவும் கே. மஹேசன் மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராகவும் எம்.எம். நயிமுதீன வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும் ஏ.எம்.பீ.எம்.பீ. அத்தபத்து கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாலித குணரத்ன மஹீபால சுகாதார அமைச்சின் செயலாளராகவும் டபிள்யூ.பீ.பீ. யசரத்ன நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சின் செயலாளராகவும் பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளராகவும் எம்.பீ.என்.எம். விக்ரமசிங்க விவசாயம், காணி, கால்நடை , நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் செயலாளராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

மேலும், எச்.எஸ்.எஸ். துய்யகொந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் டீ.டபிள்யூ.ஆர்.பீ. செனவிரத்ன பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் ரஞ்சித் ஆரியரத்ன புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளராகவும் பேராசிரியர் கே.டீ.எம். உதயங்க ஹேமபால வலுசக்தி அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நவம்பர் 29...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத்துக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அபிவிருத்திலொத்தர்சபையின் முன்னாள் தலைவர் சந்திரவங்ச பத்திராஜாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வாதியான விஜித ஹேரத் சாட்சியமளிக்கவிருந்தார். ஆனால், அமைச்சராகப் பதவியேற்ற நிகழ்வில் பங்கேற்கவேண்டியிருந்ததால் அவரால் நீதிமன்றுக்கு வரமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

விஜிதஹேரத்சார்பில் முற்பட்ட சட்டத்தரணி நாமல் ராஜபக்ச நிலமையை விளக்கி சாட்சியமளிப்பதற்கான மற்றொரு திகதியைத் தரும்படி நீதிமன்றத்திடம் கோரினார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் ஹேரத்தின் சாட்சியத்தை நவம்பர் 29க்கு ஒத்திவைத்ததுடன், குறித்த திகதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டது.

காலைக்கதிர் Kalaikkathir



# 9 ஆவது ஜனாதிபதி தேர்தலும் தமிழ்ப் பொது வேட்பாளரும்

## சுமந்திரன் விளக்கம்

2024 ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டு 1.69 வீத வாக்குகளை பெற்றது குறித்து தனது கருத்தினை தமிழ் தேசிய கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் விளக்கமளித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2024 ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற எண்ணக்கரு உதயமானபொழுதிலிருந்தே அதனை மிகக் கடுமையாக நான் எதிர்த்தது அனைவரும் அறிந்ததே. அவ்வெதிர்ப்புக்கான காரணங்கள் பல தருணங்களிலே வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் இச் சமயத்திலே மீண்டும் அவற்றை நினைவுபடுத்துவது நல்லது என்று நினைக்கின்றேன்.

1. கள யதார்த்தத்தின் படி இதில் வெற்றிபெற முடியாதென்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது.

2. அப்படியான சூழ்நிலையில் தேவையில்லாத இந்த விசப்ப ரீட்சையை செய்து தோற்பதன் விளைவு என்ன?

3. தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷை இனியும் நிரூபிக்கப்பட வேண்டியதொன்றல்ல. அப்படியிருக்க இந்த நேரத்தில் இதைச் செய்வது எவரும் இதுவரை கேள்விக்குட்படுத்தாத எமது அரசியல் நிலைப்பாட்டை காட்டிக் கொடுப்பதாகவே இருக்கும்.

4. 2022 மக்கள் போராட்டத்தின் பின்னரான இன்றையசூழ்நிலையில்சிங்களபௌத்த இனவாதம் மிகவும் கீழ்நிலையை அடைந்துள்ளது. பிரதான வேட்பாளர் ஒருவர் கூட இனவாதத்தை தூண்டாத விதத்தில் நாம் அவர்களோடு பேரம் பேசுவதற்கான வாய்ப்பு அதிகரித்திருக்கிறது.

5. இரண்டு பிரதான வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற தருணத்தை விட, மூன்று பேர் வெற்றி வாய்ப்புள்ளவர்களாக காணப்படும் போது எமது பேரம்பேசும் சக்தி பன்மடங்காக அதிகரித்துள்ளது.

6. இப்படியான அருமையான சந்தர்ப்பங்களை நழுவவிடாமல் எமது மக்கள் நலன் சார்ந்து எமக்கு எஞ்சியிருக்கின்ற ஒரே பலமான வாக்குரிமையை பேரம்பேசி பயன்படுத்துதல் வேண்டும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி எத்தருணத்திலும் தமிழ்ப் போதுவேட்பாளரை நிறுத்துகிற முயற்சியில் பங்கெடுக்கவில்லை. மாறாக பிரதான வேட்பாளர்கள் மூவரோடும் கட்சியின் முடிவின்படி உத்தியோகபூர்வமாக பேச்சுகளை நடத்தினோம். எமது கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒருவரைத் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்திய போது அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பித்து, அவருக்கு சார்பாக பிரசாரம் செய்யும் எமதுகட்சி உறுப்பினர்களை எச்சரித்தோம். பிரதான வேட்பாளர்கள் மூவரினதும் தேர்தல் அறிக்கைகள் வெளிவந்தவுடனேயே எமது மத்திய செயற்குழு கூடி அவற்றை ஆராய்ந்தது. இந்த விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்த ஐந்தாவது கூட்டம் 01.09.2024 அன்று வவுனியாவில் கூடி பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

1. தமிழ்ப்பொதுவேட்பாளராகஅறிமுகப்படுத்தப்பட்டிருக்கும்அரியநேத்திரனுக்கு நாம் ஆதரவளிப்பதில்லை.

2. தேர்தலிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அரியநேத்திரனைக் கோருவது.

3. ஜனாதிபதி தேர்தல் 2024 இல் இலங்கை தமிழ் அரசுக்கட்சி சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பது.

எமது கோரிக்கைக்கு அமைவாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் வாக்களித்ததன் காரணமாக ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் சஜித் பிரேமதாச வெற்றி பெற்றிருக்கின்றார்.

வடக்கு கிழக்கிலே அண்ணளவாக 80 வீதத்;தினர் நாம் அடையாளம் கண்ட மூன்றுபிரதான வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இதுஎமது கட்சி எடுத்த நிலைப்பாட்டிற்கான மாபெரும் அங்கீகாரம் மாறாக அரியநேத்திரனுக்கு வடக்குகிழக்கில் 14 வீதத்திற்கு குறைவாகவே வாக்குகள் கிடைத்துள்ளன.

மிகக் குறைவான அளவு வாக்குகளைப்பெற்றதன் மூலமும், பிரதான தமிழ்க் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதரவு மறுக்கப்பட்ட நிலையிலும், அரியநேத்திரனின் படுதோல்வி தமிழ் மக்களின் தோல்வியாக சித்திரிக்கப்படுவதிலிருந்து தப்பியிருக்கின்றது.

1982ஆம் ஆண்டு திகுமார் பொன்னம்பலம் 2.67 வீத வாக்குகளைப் பெற்றிருந்தார். வெறும் 1.69 வீத வாக்குகளையே பெற்றதன் மூலம் அரியநேத்திரன் தமிழ் மக்களால் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை என்பது நிரூபணமாகியிருக்கின்றது.

இந்தத் தடவை மக்களது மதி நுட்பத்தால் இந்தப் பெரும் அபாயத்திலிருந்து நாம் தப்பித்துக்கொண்டுள்ளோம். இனிமேலும் இவ்விதமான விபரீத விளையாட்டுக்களில் ஈடுபட வேண்டாம் என்று தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோரிடம் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற நாம் தயார்

## சர்வதேச நாணயநிதியம் தெரிவிப்பு

இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுவதற்குதயாராகவுள்ளதாகதெரிவித்துள்ள சர்வதேச நாணயநிதியம் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டம் குறித்த மறு ஆய்விற்கான திகதி குறித்து பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளது.

2022இல்இலங்கைமிகமோசமானபொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட பின்னர் இலங்கையை மீட்சி பாதையை நோக்கி கொண்டு செல்வதில் மிகவும்கடுமையானபோராட்டத்தின்மூலம்கிடைத்த பலாபலன்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக இலங்கை ஜனாதிபதியுடனும் அவரது குழுவினரும் இணைந்துபணியாற்றுவதற்குஆர்வமாகஉள்ளோம் என சர்வதேச நாணயநிதியத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய நிர்வாகத்துடன் கூடிய விரைவில் எங்கள் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் மூன்றாவது ஆய்வை முன்னெடுப்பதற்கான திகதி குறித்து பேச்சில் ஈடுபடுவோம் என அவர் தெரிவித்துள்ளார். (05)

# 18 வயது யுவதியை இரண்டு மாதங்களாக காணவில்லை

## பொது மக்களின் உதவியை நாடும் பொலிஸார்



புத்தளம், ஆனமடுவ, மிரியாகம பிரதேசத்தைச்சேர்ந்த யுவதி ஒருவர் கடந்த இரண்டுமாதங்களாக காணாமல் போயுள்ளார் என அவரது பாட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

18 வயதுடைய யுவதி ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இந்த யுவதி கடந்த ஜுலை மாதம் 27 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ள நிலையில் இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என முறைப்பாட்டாளரான யுவதியின் பாட்டி பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இந்த புகைப்படத்தில் உள்ள யுவதி தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் ஆனமடுவ பொலிஸ் நிலையத்திற்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் வழங்குமாறு ஆனமடுவ பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (05)

# ஓட்டோ விபத்தில் நால்வர் காயம்



பசறை - மடுல்சீமை வீதியில் 7 ஆவது மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, ஓட்டோவில் பயணித்த நால்வர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக பசறை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)

# 300 லீற்றர் கசிப்புடன் 31 பேர் காத்தான்குடியில் கைது



300 லீற்றர் சட்டவிரோதமாக கசிப்பு மதுபானத்துடன் 31 பேர் காத்தான்குடி பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர், மற்றும் போதை தடுப்பு பொலிஸார் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்புகளின் போது விற்பனைக்காக மறைத்து வைத்திருந்த நிலையில் குறித்த கசிப்பு மதுபானம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியாச்சகர் அமல் எதிரி மாணவன் பணிப்புரையின் கீழ் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி கஜநாயக்காவின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸார் நடத்திய தேடுதல்களின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகக்குடா, கல்லடி , கிராம்குளம் , தாழங்குடா, ஆரையம்பதி உட்பட பல இடங்களில் மறைத்து வைத்து விற்பனை செய்யப்பட்ட நிலையிலும், வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையிலும் குறித்த கசிப்புமதுபானம்கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கசிப்பு மதுபானத்துடன் சந்தேக நபர்கள் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாகபொலிஸார்மேலும்தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைகாத்தான்குடிபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை


ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தலைவர்கள் சிந்திக்கவேண்டும்

நடந்து முடிந்த அரசுத் தலைவர் தேர்தலில் வழக்கம் போலவே வடக்கு, கிழக்கு மலையகம் ஒரு பக்கமாகவும் இலங்கையின் ஏனைய பகுதிகள் மற்றொரு பக்கமாகவும் பிரிந்தே வாக்களித்திருக்கின்றன. 2010 முதற்கொண்டு இந்தப் போக்கு மிகத் தெளிவாக அரசுத் தலைவர் தேர்தலில் பதிவாகி வருகின்றது. அதிலும் 2015 தேர்தலில் புத்தளம் முதற்கொண்டு இரத்தினபுரி வரையில் இந்தப் போக்கு முழுமை பெற்றிருந்தது. உண்மையில் தமிழ் பேசும் மக்களின் நிலத் தொடர்பையுடைய ஒரு மிகப் பெரிய தளம் இது. இந்தத் தேர்தலிலும் மக்கள் மீண்டும் ஒரு தடவை, பல சவால்களுக்கு மத்தியிலும் தமக்கிடையிலான இந்தத் தொடர்பை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

புத்தளத்தில் தொடங்கி மன்னார், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, –நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய 12 மாவட்டங்கள் தமிழ் பேசும் மக்களின் மிகத் தெளிவான ஆளுகைக்குள் இருப்பதை அரசுத் தலைவர் தேர்தல் வாக்களிப்பு வடிவம் மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. இந்த அனைத்துப் பகுதிகளும் எங்கும் அறுபடாத நிலத்தொடர்ச்சியுடன் இருப்பதையும் அவதானிக்க முடியும். அதுமட்டுமல்ல இந்தப் பகுதிகளில் வாழும் மக்களிடையேயான அரசியல் கருத்துக்களிலும் ஒருவித ஒற்றுமை இருப்பதையும் அவதானிக்க முடியும். அதுவும் இலங்கையின் மற்றைய எல்லா மாவட்டங்களிலும் இருந்து விலகி மாறுபட்டுச் சிந்திக்கும் தன்மையை இந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர்.

மக்களின் இந்தச் செய்தி இந்தப் பகுதிகளில் உள்ள அரசியலாளர்களால் புரிந்துகொள்ளப்பட்டுள்ளதா என்கிற கேள்வி நீண்டகாலமாகவே உள்ளது. ஏனெனில் இந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் அரசியல் மூன்று முக்கியமான அரசியல் தரப்புக்களால் பிரித்துக் கையாளப்படுகின்றன. வடக்கு கிழக்கு அரசியல் தலைமைகள், முஸ்லிம் அரசியல் தலைமைகள், மலையக அரசியல் தலைமைகள் என்று இவை பிளவுண்டுள்ளன. இந்த மூன்று தரப்புக்களின் அரசியலும் வெவ்வேறானவை என்ற நிலைப்பாட்டிலேயே இவ்வாறான அரசியல் முன்னெடுப்புத் தொடர்கின்றது. ஆனால், 1970களில் இந்தத் மக்கள் கூட்டத்தினர் தமிழ் விடுதலைக் கூட்டணி என்கிற ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டனர். எனினும் தனித் தமிழீழக் கோரிக்கையுடன் அது தொடர்ந்து செயற்படும் தகமையை இழந்துபோனது. இருந்தாலும் அந்த மூன்று தரப்பு மக்களின் சிந்தனைப் போக்கிலும் இப்போதுவரை மாற்றங்கள் எதுவும் இல்லை; அவர்கள் ஒற்றுமையாகவே இருக்கின்றார்கள் என்பதை அரசுத் தலைவர் தேர்தல் முடிவுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருந்திருக்கின்றன. இந்தத் தடவையும் அது தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதைப் புரிந்துகொண்டு இந்த மூன்று தரப்புக்களும் ஒருங்கிணைந்து தமிழ் பேசும் மக்களுக்கான அரசியலைச் செய்வதற்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் முன்வரவேண்டும். இந்த மூன்று தரப்புக்களும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதன் மூலம் நாடாளுமன்றத்தில் அது மிகப் பெரிய பலமாக மாறும் என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும். அதுவும் அடுத்து வரவுள்ள பொதுத் தேர்தலில் இலங்கையின் ஏனைய பகுதி மக்களிடம் இருந்து எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மையைப் பெறுவது என்பதே பெரும் சவாலாக இருக்கும் நிலையில் தமிழ் பேசும் மக்களின் ஒருங்கிணைவு என்பது இலங்கையின் அரசியலை நிர்ணயம் செய்யும் மிகப் பெரும் சக்தியாக மாறும் என்பது புரிந்துகொள்ளப்படவேண்டும்.

அதற்கேற்ற வகையில் வடக்கு கிழக்கு தமிழ் அரசியலாளர்கள், முஸ்லிம் அரசியலாளர்கள், மலையகத் தமிழ் அரசியலாளர்கள் அனைவரும் வேற்றுமையில் ஒற்றுமையுடன் அரசியல் ரீதியாக ஒருங்கிணைந்து செயற்படுவது குறித்து ஆராய்வதும் அதற்கான வழியைக் கண்டுபிடிப்பதும் மிகவும் இன்றியமையாதது. இலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்காலத்திற்கும் அது மிகவும் முக்கியமானது. தலைவர்கள் சிந்திக்கவேண்டும்.

# தமிழ் அரசியலின் எதிர்காலம்



### இணைய உலாவி

இலங்கை அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், தமிழ் அரசியல் பிரதிநிதித்துவத்தின் எதிர்காலம் குறித்த கேள்வி இன்று முன்னணிக்கு வந்துள்ளது. பல தசாப்தங்களாக, தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் சமூகத்தின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக வாதிடுவதில் முக்கிய பங்கைக் கொண்டிருந்தனர், ஆனால் வேகமாக மாறிவரும் அரசியல் நிலப்பரப்பில் அவர்கள் தங்கள் பொருத்தத்தை இழந்துவிட்டார்களா என்று இப்போது பலர் ஆச்சரியப்படுகிறார்கள்.

தற்போதைய தமிழ் அரசியல் தலைமைகள் எதிர்நோக்கும் சவால்களைத் திறம்பட வழிநடத்த முடியுமா என்பது பற்றிய அதிகரித்துவரும் கவலைகளை அண்மைய கலந்துரையாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. தற்போதைய ஆளும்தரப்பும் தமிழ் கட்சிகளுக்கு சலுகைகள் அல்லது ‘இலவசங்களை‘ வழங்குவதில் அக்கறை காட்டாத நிலையில், இந்த அரசியல்வாதிகளின் வாழ்வும் செல்வாக்கும் கேள்விக்குறியாகியுள்ளது. தமிழ் அரசியல் நிறுவனமயப்பட்டதாக இல்லாமல் முடங்கிவிட்டதாகப் பலர் நம்புகிறார்கள், தமிழ் அரசியலாளர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் சமூகத்தை உருவாக்கவோ அல்லது அர்த்தமுள்ள முன்னேற்றத்தை வழங்கவோ தவறிவிட்டனர்.

‘தற்போதைய ஆளும்தரப்பு நமது அரசியல் கட்சிகளைப் பற்றிக் கவலைப்படும் என்று நான் நம்பவில்லை, ஏன் என்று என்னால் பார்க்க முடிகிறது. அவற்றில் எதுவுமே அர்த்தமற்றது‘ என்று அக்கறையுள்ள பார்வையாளர் கூறினார். ‘எங்களுக்கு ஒரு புதிய திசை தேவைப்படலாம் என்பது தெளிவாகிறது‘ என்கிறார் அவர்.

இந்த உணர்வு தமிழ் சமூகத்தில் பலரால் எதிரொலிக்கப்படுகிறது, தமது பழைய காவலர்கள் என்று கணிக்கப்பட்ட தமிழ் அரசியலாளர்கள் கணிசமான மாற்றத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்குப் பயனற்றவர் என்று கருதுகின்றனர். தமிழ் அரசியல்வாதிகளின் நீண்டகால வாதங்கள் இருந்தபோதிலும், வடக்கு மற்றும் கிழக்கில் அதிகாரப்பகிர்வு மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்ற முக்கிய பிரச்சினைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மழுப்பலாக உள்ளது. தமிழ் அரசியல் கட்சிகள் சொல்லாடல்கள் மற்றும் அடையாளங்களுக்கு அப்பால் செல்லத் தவறிவிட்டன என்பது பொதுவான ஒருமித்த கருத்து.

”சுற்றிச் சுற்றிச் சுப்பற்ர கொலைக்கை” என்பதைப் போன்று தமிழ் அரசியல் ஒரே புள்ளியில் சுற்றிச் சுழல்கிறது. அதில் புதிதாக எதுவும் இல்லை. புதுமை குறித்த கேள்விகள் அதிகமாக உள்ளன. ஏன் அதிகமான இளைஞர்கள், நன்கு படித்த நபர்கள் அரசியல் அரங்கில் அடியெடுத்து வைப்பதில்லை? இலங்கை ஒரு துடிப்பான, படித்த தமிழ் புலம்பெயர்ந்தோரின் தாயகமாகும், இருப்பினும் இலங்கையில் உள்ள புதிய தலைமுறை அரசியலில் நுழையத் தயங்குகிறது. முன்னேற்றம் இன்மை மற்றும் தமிழ் அரசியல் தலைமையின் வேரூன்றிய தன்மை ஆகியவற்றால் பலர் ஏமாற்றமடைந்துள்ளனர். பழைய தலைமுறை அரசியல்வாதிகள் தொடர்ந்தும் தலைமையை ஆக்கிரமித்து நிற்பதால் புதிய யோசனைகள் அல்லது மாற்று தலைமைக்கு இடம் இல்லை.

‘தமிழ் அரசியல் அடையாளத்தின் தேக்க நிலையைத் தமிழர் அல்லாத எந்தக் கட்சியும் பேசவில்லை என்பது எங்களைப் பற்றி என்ன கூறுகிறது?‘ என்று ஒரு வர்ணனையாளர் கேட்கிறார். ‘இது ஒரு தீவிரமான கேள்வி, நாம் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். தற்போதைய நிலை என்றென்றும் நீடிக்க முடியாது.‘

அரசியல் காற்று மாறிவரும் நிலையில், தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளின் இன்னும் எவ்வளவு காலத்திற்கு நின்றுபிடிப்பார்கள் என்கிற கேள்விகள் அதிகரித்து வருகின்றன. அவர்களால் புதிய யதார்த்தத்திற்கு மாறமுடியாவிட்டால் அல்லது எதிர்காலத்திற்கான அழுத்தமான பார்வையை வழங்க முடியாவிட்டால், அவர்கள் வழக்கொழிந்து போவார்கள் என்கிற அபாயம் உள்ளது. இதற்கிடையில், இளைய, அதிக ஆற்றல் மிக்க தலைமைத்துவத்தை ஈர்க்கத் தவறியிருப்பது, வரும் ஆண்டுகளில் தமிழ் பிரதிநிதித்துவத்தை பலவீனப்படுத்தும் ஒரு கவலைக்குரிய போக்காகும்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளும் தரப்பு தமிழ் அரசியல் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வாய்ப்பில்லாத நிலையில், தீவிர மறுமதிப்பீடு செய்ய வேண்டிய நேரம் இது. பாரம்பரிய அரசியல் கட்டமைப்புகளைத் தாண்டி, தமிழர் அல்லாத கட்சிகளுடன் அதிக ஒத்துழைப்பு அல்லது அடிமட்ட ஈடுபாட்டிற்கான உந்துதல் போன்ற மாற்றுவழிகளைக் கருத்தில் கொள்ள வேண்டிய நேரம் இது என்று சிலர் நம்புகிறார்கள்.

இறுதியில், இலங்கையில் தமிழ் அரசியலின் எதிர்காலம், அதன் தலைவர்கள் தங்களைப் புதுப்பித்துக்கொள்ளும் மற்றும் தெளிவான, முன்னோக்கு பார்வையை வழங்கும் திறனைப் பொறுத்தே அமையும். இந்த புதுப்பித்தல் இல்லாமல், சமூகம் பரந்த தேசிய உரையாடலில் பின்தங்கிவிடும் அபாயம் உள்ளது - இது தமிழ் அடையாளம் மற்றும் நாட்டில் அரசியல் அதிகாரத்திற்கு நீடித்த விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பு.

காலைக்கதிர் Kalaikkathir



# நேபாளத் தலைநகரில் கோட்டாபய ராஜபக்ச

## தனிப்பட்ட விஜயம் என தகவல்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேபாளம் சென்றுள்ளார்.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்து கோட்டாபய ராஜபக்ஷ, நேபாள தலைநகரை திங்கட்கிழமை வந்தடைந்தார் என அந்த நாட்டின் செய்திகள் தெரிவித்துள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷ, நேபாளத்தில் பௌத்த மதத்துடன் தொடர்புள்ள பகுதிகளிற்கு செல்லத் திட்டமிட்டுள்ளார் என அந்த நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் பல முதலீடுகளை செய்துள்ள நேபாளத்தின் சௌதாரி குடும்பத்துடன் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நெருங்கிய தொடர்புள்ளது. அவர்கள் அவரை நேபாளத்திற்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ள.

இது தனிப்பட்ட விஜயம். அரசியல் நோக்கம் கொண்டதில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(05)

# காட்டுத் தீ பரவல் அதிகரிப்பு

நாட்டில் நிலவும் வறட்சியான வானிலை காரணமாகக் காட்டுத் தீ பரவல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பதுளை ஹிகுருகமுவ வனப்பகுதியில் திங்கட்கிழமை ஏற்பட்ட தீ பரவலினால் 10 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்த தீ பரவலை கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வெல்லவாய கொட்டவெஹெரகல பகுதியில் திங்கள் இரவு ஏற்பட்ட தீ பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)

# மஜ்மா நகரில் 8 நாள்களாக விழுந்து கிடந்த யானை சாவு

மட்டக்களப்பு, கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மஜ்மா நகரில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த யானை ஒன்று திங்கட்கிழமை மாலை உயிரிழந்துள்ளதாக அப்பகுதி கிராம அபிவிருத்தி சங்க தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான ஏ.எல்.சமீம் தெரிவித்தார்.

ஓட்டமாவடி - மஜ்மா நகர் கொவிட் மையவாடியை அண்மித்த பகுதியில் கடந்த 16 ஆம் திகதி யானை ஒன்று திடீரென நோய்வாய்ப்பட்ட நிலையில் எழும்ப முடியாத நிலையில் விழுந்து கிடந்துள்ளது.

இந்நிலையில், யானைக்கு சிகிச்சையளிக்க அம்பாறை பகுதியிலிருந்து வனவிலங்கு திணைக்கள வைத்தியர் குழுவினர் வருகை தந்து சிகிச்சையளித்தும் சிகிச்சை பலனின்றி யானை எட்டு நாள்களின் பின்னர் யானை உயிரிழந்துள்ளது.

யானையை காப்பாற்றுவதற்காக அதற்கு நீர் ஊற்றி உணவு வழங்கும் நடவடிக்கைகளில் பிரதேச சமூக செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(05)





# தடையில்லாத எரிபொருள் விநியோகத்துக்கு வலுவான நிதிகையிருப்பை விட்டிருக்கிறேன்

## காஞ்சன விஜேசேகர இப்படித் தெரிவிப்பு



தடைப்படாத எரிபொருள் மற்றும் மின்சாரத்தை வழங்கக் கூடியவாறான போதிய நிலக்கரி, பெற்றோலிய உற்பத்திகளின் கையிருப்புடன் வலுவான நிதி நிலைமையைக் கொண்ட கட்டமைப்பை கையளித்துச் செல்கிறேன் என முன்னாள் மின் மற்றும் சக்தி வலு அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சுக்கானவாகனங்களையும்பொறுப்புக்களையும் திங்கட்கிழமை கையளித்ததன் பின்னர் எக்ஸ் வலைத்தளத்தில் வருமாறு பதிவேற்றம் செய்துள்ளார்.

நான் பயன்படுத்திய அரச வாகனங்கள், வலுவான நிதியியல் கட்டமைப்பை கொண்டிருந்த மின் மற்றும் சக்தி அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்களை போதியளவு பெற்றோலிய உற்பத்தி மற்றும் மின்னுற்பத்திக்கு அவசியமான நிலக்கரி கையிருப்புக்களுடன் கையளித்து விட்டேன்.

இவ்வனைத்து கட்டமைப்புக்களும் சாதகமான ஐந்தொகை செலவின மீட்டு சேவை வழங்கல், விநியோகஸ்தர்களுக்கான உரிய கால நிதி செலுத்துகை மேலதிகவருமானத்தின்ஊடாகதிறைசேரிக்குஆதரவளித்தல் உள்ளிட்ட நேர்மறையான விளைவுகளை வழங்கும் நிலையில் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட கடந்த இரண்டு வருட காலத்தில் எனக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

2022 ஆம் ஆண்டு 4-13 மணித்தியால மின் விநியோக துண்டிப்பு, எரிபொருள், நிலக்கரி பற்றாக்குறை, பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் விநியோகஸ்தர்கள் இன்மை, அவற்றுக்கு தேவையான நிதி இன்மை, ஆகிய நிலைமைகளே காணப்பட்டன.

இருப்பினும் தற்போது தடைப்படாத எரிபொருள் மற்றும் மின்சாரத்தை வழங்கக் கூடியவாறான போதிய நிலக்கரி, பெற்றோலிய உற்பத்திகளின் கையிருப்புடன் வலுவான நிதி நிலைமையைக் கொண்ட கட்டமைப்புக்களாக இவற்றை கையளித்துச் செல்கிறேன்.

இலங்கை பெற்றோலிய களஞ்சியப்படுத்தல் நிறுவனம் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு தேவையான 123, 888 மெற்றிக்தொன் டீசல், 13627 மெற்றிக் தொன் சுபர் டீசல், 92 ரக ஒக்டென் பெற்றோல் 90,972 மெற்றிக் தொன், 18 ,729 மெற்றிக் தொன் 95 ரக ஒக்டென் பெற்றோல்,விமான பயன்பாட்டுக்கு தேவையான ஜெட் ஏ 1எரிபொருள் 30,295 மெற்றிக் தொன் எரிபொருள்கள் ஆகியவற்றை 2024.09.20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கையிருப்பில் காணப்பட்டது.(05)

# தனியார் பஸ் சாரதி மீது வாள்வெட்டு தாக்குதல்

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையிலிருந்து யாழ். நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸிள் சாரதி மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மணியந்தோட்டம் 11 ஆவது குறுக்கு வீதியில் திங்கட்கிழமை மாலை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மூடிக் கொண்டுவந்தவர்கள் குறித்த தாக்குதலை நடத்தியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சாரதி கைகளில் காயம்ஏற்பட்டுயாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டுள்ளார்.

சிலதினங்களுக்குமுன்னர் யாழ். பஸ் நிலையத்தில் சில யுவதிகளை கிண்டல் செய்த இளைஞர்களை எச்சரிக்கை விடுத்ததாகவும், இதனாலேயே இளைஞர்கள் சாரதியை காயப்படுத்தியுள்ளனர் எனவும்காயமடைந்தவர்களின்உறவினர்கள்சந்தேகம் வெளியிட் டுள்ளனர்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பானவிசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# மாற்றத்தை விரும்பும் மக்களுக்கு தங்கள் வருகை நம்பிக்கை ஒளிக்கீற்றை ஏற்படுத்தியிருக்கிறது

## அநுரவுக்கு சந்திரகுமார் வாழ்த்து



இலங்கையின்ஒன்பதாவதுநிறைவேற்றுஅதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக தாங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாவது மாற்றத்தை விரும்பும் மக்களிடம் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருக்கிறது எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் புதிய ஜனாதிபதிக்கு சமத்துவக் கட்சியின் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க பதவியேற்றுள்ள நிலையில் சந்திரகுமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் -

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில், வரலாற்று வெற்றியொன்றை தம் வசப்படுத்தி, இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேர்வாகியிருக்கும் தங்களுக்கு, சமத்துவ கட்சியின் சார்பில் வாழ்த்துக்கள்.

அரசியல் மாற்றம் ஒன்றை வேண்டி பல்வேறு தசாப்தங்களாக காத்திருக்கும் இலங்கையர்களுக்கு, தங்களது வருகை, நம்பிக்கையின் ஒளியை வீசி சென்றிருக்கிறது. ஈழத்திருநாட்டை, இந்து சமுத்திரத்தின் செழுமைமிகு நாடாக மீளக்கட்டியெழுப்பும்தங்களது முயற்சிகளுக்கு, எமது கட்சியின் ஆதரவும், ஆசிர்வாதமும் எப்போதும் இருக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(05)



# அநுரகுமாரவின் வெற்றிக்காக வவுனியாவில் கொண்டாட்டம்



நிறைவடைந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டதை தொடர்ந்து, திங்கட்கிழமை அவர் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டதையடுத்து, வவுனியாவில் கட்சி ஆதரவாளர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில்ஈடுபட்டனர்.

அதன்படி, வவுனியா இரட்டை பெரியகுளத்தில் கட்சி ஆதரவாளர்கள் பொது மக்களுக்குபால்சோறுவழங்கி புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றியை கொண்டாடினர். (05)

# மன்னாரிலும் வெற்றிக்கொண்டாட்டம்







இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் திங்கட்கிழமை காலை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிலையில், மன்னாரில் திங்கட்கிழமை காலை 11.30 மணியளவில் ஆதரவாளர்களால் வெற்றிக் கொண்டாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பஜார் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட கிளையால் வெற்றி கொண்டாட்ட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது பொங்கல் பொங்கி மக்களுக்கு வழங்கப்பட்டு தமது வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடினர்.



# தலைமன்னார், மன்னார் கடற்கரையில் பீடி இலைப் பொதிகள் கண்டுபிடிப்பு



தலைமன்னார் மற்றும் மன்னார் ஆகிய கடற்கரை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 1318 கிலோ 22 கிராம் நிறையுடைய பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடல் மார்க்கமாக இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடற்படை யினரால் கடந்த 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, தலைமன்னார் நடுகுடா கடற்கரை பகுதியிலிருந்து 206 கிலோ 500 கிராம் பீடி இலை பொதிகளும், மன்னார் கடற்கரை பகுதியிலிருந்து 1050 கிலோ 800 கிராம் பீடி இலை பொதிகளும், மன்னார் வடக்கு கடற்கரை பகுதியிலிருந்து 60 கிலோ 920 கிராம் பீடி இலை பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பீடி இலை பொதிகள் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள் ளனர். (05)

# புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு முன்னாள் ஜனாதிபதிகள் வாழ்த்து

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ உட்பட முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது வாழ்த்து செய்தியில், 'சமூக பொருளாதாரம், அரசியல் மற்றும் ஜனநாயக அரசாட்சி உள்ளிட்ட துறைகளில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன.

அவற்றிலிருந்து இலங்கையை மீட்டு நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்து செய்தியில், 'இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட அனுரகுமார திஸாநாயக்கவுக்கு எனது வாழ்த்துக்கள்.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதிலும் ஐக்கியமான மற்றும் பலமான இலங்கையை உறுதி செய்வதிலும் அவர் வெற்றியடைய வாழ்த்துகிறேன். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தனது வாழ்த்து செய்தியில், ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் ஜனநாயக மற்றும் அமைதியான தேர்தலுக்கு வாழ்த்துகள்! முக்கியமான பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களைக் கொண்டுவரும் அதே வேளையில், புதிய அரசாங்கம் சட்டத்தின் ஆட்சி மற்றும் தேசிய ஒற்றுமையை நிலைநிறுத்துவதற்கான அதன் ஆணையை செயல்படுத்தும் என்று நம்புகின்றோம். - எனத் தெரிவித்துள்ளார்.

இதே போன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் புதிய ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# லங்கா சதொச நிறுவன தலைவர் பதவிவிலகல்



லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவர் தனது இராஜினாமா கடிதத்தை வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பிரனாந்துவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

புதிய ஜனாதிபதியான அநுரகுமார திசாநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பசந்த யாப்பா அபேவர்தன தனது இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.(05)

# விருப்பு வாக்குத் குறித்து வாக்காளர்கள் மத்தியில் போதியளவு தெளிவு இல்லை

## பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு தகவல்

இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் விசேட தேவையுடைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏற்ற வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டி ருந்த ஏற்பாடுகள் பாராட்டுக்குரியவையென பொதுநல வாய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

பிரசார நடவடிக்கைகளின்போது அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, விருப்பு வாக்களிப்பு செயன்முறை தொடர்பில் வாக்காளர்கள் மத்தியில் போதிய தெளிவின்மை காணப்பட்டதாகவும் இதுகுறித்து எதிர்வரும் தேர்தல்களில்



விழிப்புணர்வூட்டப்படவேண்டும் என்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களுக்கு சமஷ்டியை வழங்காமல் உண்மையான மாற்றம் சாத்தியமில்லை

## அநுரகுமார புரிந்துகொள்ளவேண்டும் என்கிறார் கஜேந்திரகுமார்



தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று, அவர்களைத் தனித்தேசமாக அங்கீகரித்து, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வழங்காமல் தென்னிலங்கை மக்கள் கோருகின்ற மாற்றம் முழுமையடையாது என்ற உண்மையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அம்மக்களுக்குக் கூறவேண்டும். அதேபோன்று தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காமல், முன்நோக்கிப் பயணிக்கமுடியும் என கருதினால், அது ஒருபோதும் சாத்தியமாகாது என்பதையும் அவர் புரிந்துகொள்ளவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

கடந்த சனிக்கிழமை நடைபெற்றுமுடிந்த நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமிழ்த்தேசியத்தை மனதிலிருத்தி தமது விருப்பத்தை வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

70 வருடங்களுக்கும் மேலாகத் தொடரும் பல்வேறு சவால்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் இத்தகைய உறுதியான நிலைப்பாட்டை வெளிக்காட்டிவருவதைப் பாராட்டுவதுடன், அதற்குத் தலைவணங்குகின்றோம்.

நாம் இம்முறை ஜனாதிபதித்தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தமிழ் மக்களிடம் வலியுறுத்தியிருந்தோம். அதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வழமையான சுமார் 80 சதவீதமாகப் பதிவாகும் வாக்களிப்பு இம்முறை கணிசமானளவால் குறைவடைந்திருக்கின்றது.

எனவே, வடக்கு, கிழக்கில் சுமார் 30 - 35 சதவீதமான மக்கள் தமது எதிர்ப்பை வலுவாகக் காண்பித்திருக்கின்றார்கள். அதேபோன்று இம்முறை தேர்தலில் தமிழ்த்தேசிய கோஷத்தை வலியுறுத்தி களமிறக்கப்பட்ட தமிழ் பொதுவேட்பாளருக்குக் கிடைத்திருக்கும் வாக்குகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கிறபோது, வடக்கு, கிழக்கில் பெரும்பான்மை மக்கள் தமிழ்த்தேசியத்துக்கு ஆதரவாகவே நின்றிருக்கிறார்கள்.

அதேபோன்று தமிழ்த்தேசியத்தை முன்னிலைப்படுத்திய தமிழரசுக்கட்சியின் ஆதரவைப்பெற்ற சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்களால் அளிக்கப்பட்ட வாக்குகளை தென்னிலங்கை சிங்கள வேட்பாளருக்கு அளிக்கப்கப்ட்ட வாக்குகளாகக் கருதமுடியாது.

எனவே இவ்வனைத்தையும் சேர்த்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த்தேசியத்துக்கான அறுதிப்பெரும்பான்மைகாண்பிக்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை இந்த ஜனாதிபதித்தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். கடந்த தேர்தலில் 3 சதவீத வாக்குகளைப் பெற்ற அவர், இம்முறை ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கிறார் எனில், இதன்மூலம் தென்னிலங்கை மக்களும் மாற்றத்துக்குத் தயாராக இருக்கிறார்கள் என்ற செய்தி வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இருப்பினும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது எப்போதும் போல வெறுங்கனவாகத்தான் இருக்கும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இருக்கமுடியாது.

எனவே இவற்றிலிருந்து வேறுபட்டு உண்மையான மாற்றத்தைஏற்படுத்தவேண்டுமாயின், தெற்கில்வாழும் மக்களுக்கு அநுரகுமார திஸாநாயக்க உண்மையைக் கூறவேண்டும். தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று, அவர்களைத் தனித்தேசமாக அங்கீகரித்து, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வழங்காமல் தென்னிலங்கை மக்கள் கோருகின்ற மாற்றம் முழுமையடையாது என்ற உண்மையை அவர் அம்மக்களுக்குக் கூறவேண்டும்.

மாறாக, தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காமல், முன்நோக்கிப் பயணிக்கமுடியும் என அவர் கருதினால் அது ஒருபோதும் சாத்தியமாகாது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விளங்கிக்கொள்ளவேண்டும்.

அதன்பிரகாரம் அவர் முழுமையான சமஷ்டி தீர்வை நோக்கிய பாதையில் இறங்கவேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பாடுமாயின், நாம் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். - என்றார். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# மாற்றத்தை விரும்புகின்ற மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா இப்படி வாழ்த்து



நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஒன்று நிகழவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த மக்களின் மனவிருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலையே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது–

தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் நாட்டின் பொருளாதார நிலைமைகளையும் மனதில் நிறுத்தி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் தீர்க்கமான முடிவொன்றை எடுத்து செயலாற்றி இருந்தோம்.

ஆனாலும் எமது நம்பிக்கைகளுக்கு மாற்றாக இலங்கைத் தீவில் வாழுகின்ற மக்களில் கணிசமானவர்கள் ஆட்சி மாற்றம் ஒன்றையே தமது விருப்பமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

மாற்றத்தை விரும்பி வாக்களித்த மக்களின் மனவிருப்பங்களிற்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

அதேவேளை, சமத்துவமான தேசத்தை உருவாக்கும் கனவோடு ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி தோழர் அநுர குமார திசாநாயக்க அவர்கள் அனைத்து மக்களினதும் கனவுகளை ஈடேற்றுவார் என்பதையும் எதிர்பார்க்கிறோம்.

எமது வேண்டுகோளை ஏற்று எமது அரசியல் வழி நின்று வாக்களித்த மக்களுக்கும் தமது ஜனநாயக கடமைகளை நிறைவேற்றும் வகையில் வாக்களிப்பில் கலந்து கொண்ட அனைத்து மக்களிற்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

இதுவரை கால எமது நாடாளுமன்ற அரசியலில், தேசிய நல்லிணக்க வழிமுறை வரலாற்றில் அரசுகளுக்கு உள்ளிருந்தும் வெளியே இருந்தும் மக்கள் நலன் சார்ந்து நாம் உறுதியுடன் செயலாற்றி வருகின்றோம்.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதே என்றும் மாறாத எமது அரசியல் இலக்கு என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு இலங்கைக்கான ஜப்பான் தூதர் வாழ்த்து



இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ஹிடேகி மிசுகொஷி, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ஹிடேகி மிசுகொஷி மேலும் தெரிவிக்கையில –

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்துவதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து பணியாற்ற நாம் எதிர்பார்த்து இருக்கின்றோம்.

இலங்கை மக்கள் தமது தலைவரை தெரிவு செய்வதில் இலங்கையின் ஜனநாயக செயற்பாட்டில் தீவிரமாக பங்குபற்றியமைக்காக நாம் வாழ்த்த விரும்புகிறோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இலங்கை மக்களின் தலைமையிலான புதிய நிர்வாகத்துடன் பொருளாதார மற்றும் சமூக இலக்குகளை அடைவதற்கும் எமது வலுவான உறவை அடைவதற்கும் ஜப்பான் தயாராக இருக்கும்.

இலங்கையிலும், ஜப்பானிலும் தலைவர்கள் மாறினாலும் எங்களுடைய நட்பு வலுவானது என்பது வரலாறு. இலங்கையில் இம்முறை நடைபெற்ற தேர்தலின் பின், கடந்த காலத்தைப் போலவே, புதிய பக்கங்களிலும் புதுப்பிக்கப்பட்ட நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் கதைகளால் நிரப்பப்படும் வகையில் எமது உறவின் பக்கம் திரும்பும் என்று நாங்கள் நம்புகிறோம் எனத் தெரிவித்தார்.

(05)

# கென்ய ஜனாதிபதி வாழ்த்து



கென்யாவின் ஜனாதிபதி கலாநிதி வில்லியம் ருடோ, இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிற்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த இராஜதந்திர உறவுகளை வலியுறுத்தினார்.

கென்யாவின் ஜனாதிபதி கலாநிதி வில்லியம் ருடோ புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு தெரிவித்துள்ள வாழ்த்தில் –

2024 செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிற்கு கென்ய ஜனாதிபதி கலாநிதி வில்லியம் ருட்டோ தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். நாட்டை முன்னோக்கி வழிநடத்தும் அவரது தலைமையின் மீது இலங்கை மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையில் வேரூன்றிய கென்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவுகளையும் கென்ய ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், முக்கிய ஒத்துழைப்பு முன்னுரிமைகளை முன்னெடுப்பதற்கும், தெற்கு-தெற்கு ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், கென்ய அரசாங்கத்துடன் இணைந்து, இலங்கையுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கு அவர் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.

வர்த்தகம், முதலீடு, காலநிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான மலிவு நிதிக்கான அணுகல் போன்ற துறைகளில் கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ருட்டோ அடிக்கோடிட்டுக் காட்டினார்.

முடிவில், ஜனாதிபதி ருடோ, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கை மக்களுக்கும் நல்ல ஆரோக்கியம் மற்றும் செழிப்புடன் வாழ வாழ்த்தினார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2024இல் வெளியிடப்பெற்றது